**சிறப்பு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, (இரயில்வே) கடலூர்.**

**முன்னிலை: செல்வி.ஆர்.ஸ்ரீநிதி.B.A., L.L.B.(Hons), L.L.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.1**
**கடலூர்.**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ஆம் நாள் வியாழன்கிழமை

திருவள்ளுவராண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி 12-ம் நாள்

CNR. No. TNCD06-000408-2020

ஆண்டுபட்டிகை வழக்கு எண். 92/2020

காவல் ஆய்வாளர்
ரயில்வே பாதுகாப்பு படை
கடலூர்,
குற்ற எண்.03/2019

....குற்றமுறையிடுபவர்

-- எதிர் --

பாபு (வயது-47/2019)
த/பெ. கோவிந்தன்
நெ.4A, மீனவர்தெரு,
குள்ளஞ்சாவடி post,
குறிஞ்சிப்பாடி TK,
கடலூர். ....எதிரி

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட**

**R.O.C.No. 814/2020/RG/F1 (P.Dis.No. 36/2021) உத்தரவு மற்றும் Rule 106 Cr.R.P.-ன்படி**

**CASE SUMMARY**

| i) The Period of Remand of the Accused: | Date of Remand | Date of surrender | Released on Bail |
|---|---|---|---|
| | 01.01.2020 | -- | 08.01.2020 |
| ii) Date of filing of the | Filing of complaint | Filing of Final Report | |

| | | | |
|---|---|---|---|
| Complaint / Final report in the Court | -- | 19.03.2020 | |
| iii) The date of questioning of the Accused U/s.240 of the Code of Criminal Procedure, 1973 | 04.08.2022 | | |
| v) Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except routine petitions like petitions U/s. 317 of the Code | Crl.M.P.No. | Date of Filing | Result |
| | -- | -- | -- |
| v) Date of examination in-chief and cross-examination of a witness | Name of the Witness | Date of Chief | Date of Cross |
| | 1.திரு. பிலோமின்ராஜ் (Sub- Inspector) | 26.03.2022, 06.07.2022 | 26.10.2022 |
| | 2. திரு. சந்தானகிருஷ்ணன் (கிராம நிர்வாக அலுவலர்) | 02.02.2023 | 02.02.2023 |
| | 3.திரு. ஜெராட் (முத்திரை ஆய்வாளர்) | 02.02.2023 | 02.02.2023 |
| | 4.திரு. சரவணன் | 25.07.2024 | 25.07.2024 |
| | 5.திரு. பாலமுருகன் | 25.07.2024 | 25.07.2024 |
| | 6.திரு. கற்பூரசுந்தரபாண்டியன் | 22.05.2025 | 22.05.2025 |
| | 7.திரு. சரவணன் | 11.09.2025 | 11.09.2025 |

| | | | |
|---|---|---|---|
| | (காவல் ஆய்வாளர்) | | |
| | 8.திரு. சந்திரமோகன் (தலைமைக் காவலர்) | 11.09.2025 | 11.09.2025 |
| vi) Date of examination of the Accused U/s.313(1)(b) Cr.P.C. | 22.09.2025 | | |
| vii) Details of abscondence of an Accused and his appearance / production, as the case may be; and | Nil | | |
| viii) Grant of stay by superior Courts and the results there of: | Nil | | |

இவ்வழக்கானது 09.06.2020-ந் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 24.03.2026-ந் தேதி இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் திரு.அகிலேஷ் சிங் அவர்களும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.நந்தகுமார் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

கடந்த 31.12.2019 அன்று கடலூர் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தின் சோதனை கட்டளை உத்தரவின்படி ரயில்வே பாதுகாப்படை கடலூர் துறைமுகம் உதவி ஆய்வாளர் பிலோமின்ராஜ் என்பவர் குள்ளஞ்சாவடி ஆலப்பாக்கம் ரோட்டிலுள்ள மளிகை கடையில் சோதனை செய்தபோது அங்கு ரயில்வே சொத்துக்கள் எதுவும் கிடைக்கவில்லை. பின்னர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றையதினம் 15.30 மணி முதல் 17.00 மணிவரை எதிரிக்கு சொந்தமான மீனவர் தெருவில் அமைந்துள்ள இரும்பு கடையையும், குடோனையும் சோதனை செய்ததில் ரயில்வேக்கு சொந்தமான மின்சார ரயில்கள் இயங்க உதவுகிற மின்கம்பிகளை தொய்வில்லாமல் தாங்கி பிடிக்க உதவும் காப்பர்

உலோகத்தினால் ஆன 27 ஜோடி OHE இரயில்வே கம்பிகள், அதன் இணைப்பு பொருட்களான 69 காப்பர் கிளிப்புகள், 100 காப்பர் பிளேட்டுகள், 3 அடி நீளம் கொண்ட காப்பர் ஒயர் துண்டு, 2 அடி நீளம் கொண்ட காப்பர் ஒயர் ஆகியவைகளை கைப்பற்றியதாகவும், இரயில்வே பொருட்களை வைத்திருப்பதை பற்றி அவரை விசாரிக்க அவர் எவ்வித அத்தாட்சியோ, காண்பிக்காததால் இரயில்வே பொருட்களை அவர் உடைமையில் வைத்திருந்ததால் எதிரி மீது பிரிவு 3(அ) இருப்புபாதை சொத்துக்கள் (சட்டவிரோத உடைமை) இரயில்வே சட்டம் 1966ன் படி வழக்கு பதிவு செய்து, குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207-ன்படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது, எதிரிக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

**4) குற்றச்சாட்டு :-**

எதிரிக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு எதிரியிடம் அவர் மீதான குற்றங்கள் குறித்து வினவியபோது, எதிரி தன் குற்றத்தை மறுத்தார். எதிரி தன் குற்றத்தை மறுக்கவே வழக்காவணங்களை பரிசீலனை செய்து பார்த்தபோது அரசுதரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றத்திற்கு போதுமான ஆதாரம் இருப்பதாக இந்நீதிமன்றத்தால் கருதப்பட்டு, எதிரியிடம் பிரிவு 3(அ) இருப்புபாதை சொத்துக்கள் (சட்டவிரோத உடைமை) இரயில்வே சட்டம் 1966ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் படித்துக்காட்டி விளக்கி கூறி வினவியபோது எதிரி தான் குற்றவாளி அல்ல என்று கூறியுள்ளார்.

5) அரசுத்தரப்பில் 1 முதல் 8 வரையான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1 முதல் சா.பொ.4 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சி யாரும் விசாரிக்கப்படவில்லை.

6) அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-

**அ.சா.1 திரு.பிலோமின்ராஜ் உதவி ஆய்வாளர் தனது முதன்மை விசாரணையில் சாட்சியத்தில்,** கடந்த 31.12.2019 அன்று கடலூர் துறைமுகத்தில் உள்ள இரயில்வே பாதுகாப்பு படையில் பணியில் இருந்தபோது திருச்சிகோட்ட இரயில்வே பாதுகாப்பு படை குற்றப்புலனாய்வு பிரிவு மற்றும் குற்றத்தடுப்பு பரிவு அவர்களால் இரயில்வே பொருட்களை ஆஜர் எதிரி விற்பதாக கொடுத்த தகவலின்பேரில் ஆஜர் எதிரி கடலூர் மாவட்டம் குள்ளஞ்சாவடியில் நடந்திவரும் அவருடைய கடையை சோதனை செய்வதற்காக குற்றவியல் நீதிமன்றம் நடுவரை அனுகி சோதனை உத்தரவை பெற்று அன்றைய தினமே கடலூர் மாவட்டம் குள்ளஞ்சாவடி ஆலப்பாக்கம் மெயின் ரோட்டில் உள்ள மளிகை கடையில் சோதனை செய்ய குற்றத்தடுப்பு திரு. சஞ்சய் பணிக்கர் மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவு ஆய்வாளர் திரு.சந்திரசேகர் மற்றும் குற்றப் புலனாய்வு பிரிவு உதவி ஆய்வாளர் திரு.சரவணன் மற்றும் காவலர் திரு. சந்திரமோகன் அவர்களோடு நானும் மதியம் 13.20 மணிக்கு குள்ளஞ்சாவடி ஆலப்பாக்கம் மெயின் ரோட்டில் உள்ள மளிகை கடைக்கு சென்று அந்த பகுதியில் இருந்த தனிநபர் சாட்சிகளான திரு.சரவணன் த.பெ. கிருஷ்ணப்பன் மற்றும் பாலமுருகன் மற்றும் உடன் இருந்த உதவி ஆய்வாளர் திரு.சரவணன் அவர்களையும் காவலர் திரு.சந்திரமோகன் அவர்களையும் சாட்சியாக வைத்து ஆஜர் எதிரியிடம் அவரின் கடையை சோதனை செய்ய இருக்கும் தகவலை சொல்லி 13.30 முதல் 14.00 மணி வரை சோதனை செய்தோம். சோதனை செய்ததில் அவர் கடையில் எந்த விதமான இரயில்வே பொருட்களும் அகப்படவில்லை என்று சோதனை ஜாபிதா அசாஆ.1 தயார் செய்து, பின்னர் ஆஜர் எதிரியை விசாரித்து அவரிடம் வாக்குமூலம் பெற்று, அதில் அவர் "நான் எனது வீட்டில் நடத்திவரும் இரும்பு கடையை பற்றி கூறினேன். அந்த கடையை என் மனைவி இந்திராவும் இரண்டு வேலை ஆட்களும் பார்த்து கொள்கிறார்கள். எனது பழைய இரும்பு கடையை பார்க்க வேண்டும் என்று சொன்னால் நான் அழைத்து செல்கிறேன்" என்று சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் அசாஆ.2 என்றும், அந்த இரும்பு கடைக்கு என்னையும் மேற்படி சாட்சிகளையும் அழைத்து சென்று, பூட்டி இருந்த பழைய

இரும்பு கடை குடோனை திறக்க சொல்லி 13.30 முதல் 17.00 மணிவரை சோதனையிட்டபோது அந்த குடோனின் தென்மேற்கு மூலையில் வெள்ளைநிற பாலித்தின் பேக்பண்டல் இருந்தது, அதை திறந்து பார்த்தபோது அதில் 27 ஜோடி O.H.E இரயில்வே காப்பர் டிராப்பர் ஒயரும் மற்றும் 100 எண்ணிகையில் காப்பர் லாக் பிளேட் (S.E.C 1163 என்ற அடையாளம் கொண்டது) மற்றும் 69 எண்ணிக்கையில் காப்பர் கிளிப்ஸ் (அடையாள குறியீடு K.H.A T.R.I 1192) மற்றும் 3 அடி நீளம் கொண்ட காப்பர் ஒயர் துண்டு மற்றும் 2 அடி நீளம் கொண்ட காப்பர் ஒயர் ஒன்று இருந்தது, அவை அனைத்தும் 13 கிலோ எடை இருந்தது, அவற்றிக்கு ஒரு சோதனை ஜாபிதா அசாஆ.3 தயார் செய்து ஆஜர் எதிரி மற்றும் 2 தனிநபர் சாட்சிகள் மற்றும் இரண்டு இரயில்வேதுறை சாட்சிகள் முன்னிலையில் மேற்கண்ட பொருட்களை கைப்பற்றி, கைப்பற்றப்பட்ட பொருட்கள் மீது அடையாள துண்டு சீட்டுகள் ஒட்டப்பட்டு, அந்த இடத்திலேயே ஆஜர் எதிரியிடம் சாட்சிகள் முன்னிலையில் மறுஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு, அதில் மேற்கண்ட கைப்பற்றப்பட்ட பொருட்களை அடையாளம் தெரியாத சைக்கிள் வியாபாரியிடம் வாங்கியதாக சொன்னதை மறு ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் அசாஆ.4 என்றும், விசாரித்தபோது இரயில்வே பொருள் என்று தெரியாமல் இலாபம் அடையும் நோக்கில் வாங்கியதாக சொன்னார். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒரு பாலித்தின் பைக்குள் உள்ள 27 எண்ணிக்கையிலான copper drapper, 100 எண்ணிக்கையிலான Copper lock plates, 69 எண்ணிக்கையிலான Copper clips, 3 அடி நீளமுள்ள Copper conduct wire மற்றும் 2 அடி நீளமுள்ள Copper conduct wire 31.12.2019 அன்று கைப்பற்றப்பட்டது. மேற்கண்ட 27 எண்ணிக்கையிலான copper drapper சா.பொ.1 என்றும், 100 எண்ணிக்கையிலான Copper lock plates சா.பொ.2 என்றும், 69 எண்ணிக்கையிலான Copper clips சா.பொ.3 என்றும், 3 அடி நீளமுள்ள Copper conduct wire மற்றும் 2 அடி நீளமுள்ள Copper conduct wire சா.பொ.4 என்றும், எதிரி கொடுத்த மறுஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினமே காரணம் கூறி கைது செய்து, கைது செய்த நபரையும் அன்றைய தினம் 19.30 மணியளவில் RPF நிலையம் கடலூர் துறைமுக சந்திப்பில் கொண்டுவந்து, எதிரியை நிலையம் கொண்டு வந்த பின்னர் அவருடைய உறவினருக்கு தெரிவித்து, பின்னர் அன்றைய

தினமே எதிரியின் மீது குற்ற எண்.3/2019ல் பிரிவு 3(a) RP (UP) Railaway Act ன் படி வழக்கு பதிவு செய்து, பின்னர் 01.01.2020 அன்று எதிரியுடன் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் படிவம் 91 அசாஆ.5 கனம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன் எனது விசாரணையில் 06.01.2020 அன்று வழுதலாம்பட்டு கிராம நிர்வாக அலுவலர் திரு.சந்தானகிருஷ்ணனை அனுகி பொருட்கள் கைப்பற்றப்பட்ட கடையின் உரிமை ஆவணம் பெற்று, பின்னர் 09.01.2020 அன்று கடலூர் முத்திரை ஆய்வாளர் திரு.டேனியல் என்பவரிடம் இருந்து எடை இயந்திரம் சம்பந்தமான உரிமம் பற்றி ஆவணத்தை பெற்று, 17.01.2020 அன்று சாட்சியான சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, 21.01.2020 அன்று சாட்சியான பாலமுருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, 01.02.2020 அன்று RPF உதவி ஆய்வாளர் சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, 06.02.2020 அன்று கடலூர் C.T.O (வணிகவரித்துறை) அலுவலகத்தில் உதவி ஆணையர் கணேஷ் என்பவரை விசாரித்து எதிரி வணிக வரி செலுத்தியுள்ளாரா என்று ஆவணம் பெற்று, 22.02.2020 அன்று திரு.கற்பூர சுந்தரபாண்டியன் S.S.E. TRD Cuddalore என்பவரை நிலையம் அழைத்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தினை அவர் முன்னிலையில் ஆஜர்படுத்தி அதற்கான சான்றிதழ் பெற்று, அன்றைய தினமே அவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, 25.02.2020 அன்று RPF சாட்சி சந்திரமோகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, என்னுடைய விசாரணையை முடித்துக்கொண்டு 22.05.2020ம் தேதி இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**7) கிராம நிர்வாக அலுவலர் திரு.சந்தானகிருஷ்ணன் (அ.சா.2) தனது சாட்சியத்தில்,** கடந்த 01.06.2020 அன்று கடலூர் இரயில்வே பாதுகாப்பு படை ஆய்வாளரிடம் இருந்து எண்.4, மீனவர் தெரு, குள்ளஞ்சாவடி என்ற விலாசத்தில் இயங்கி வரும் பழைய இரும்பு கடையை யார் நடத்தி வருகிறார்கள் என்று குறித்து விசாரித்து கொடுக்குமாறு வேண்டுகோள் கடிதம் அளித்ததை பொறுத்து, என்னுடைய உதவியாளர் மற்றும் கிராமத்தில் உள்ள பொதுமக்களை விசாரித்து, மேற்கண்ட விலாசத்தில் உள்ள கடையை கோவிந்தன் மகன் பாபு என்பவர் நடத்தி வருவதாக என் விசாரணையில் தெரியவர, விசாரணையின் அடிப்படையில் கோவிந்தன் மகன் பாபு என்பவர் மேற்கண்ட கடையினை நடத்திவருவதாக சான்று அசாஆ.6 வழங்கினேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8) **முத்திரை ஆய்வாளரான ஜெராட் (அ.சா.3) தனது சாட்சியத்தில்,** கடந்த 2020ம் ஆண்டு ஜனவரி மாதம் கடலூர் முத்திரை ஆய்வாளர் கூடுதல் பொறுப்பில் இருந்தபோது கடலூர் இரயில்வே பாதுகாப்பு படை ஆய்வாளர் அவர்களிடம் இருந்து வரப்பட்ட வேண்டுகோள் கடிதத்தில், குள்ளஞ்சாவடி பகுதியில் இரும்பு கடை நடத்திவரும் பாபு என்பவர் பயன்படுத்தி வந்த எடை அளவு கருவியின் பரிசோதனை சான்று வழங்குமாறு என்னிடம் கேட்டதன்பேரில் அலுவலகத்தில் இருந்த ஆவணங்களை பரிசீலனை செய்து ஏற்கனவே வழங்கப்பட்ட எடை அளவு கருவியின் பரிசோதனை செய்த சான்று நகல் அசாஆ.7 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

9) **ஒப்புதல் வாக்குமூல சாட்சியான சரவணன் (அ.சா.4) தனது சாட்சியத்தில்,** என்னிடம் காட்டப்படும் சோதனை பிடியாணையில் உள்ள சாட்சி கையெழுத்தில் முதலாவதாக உள்ள கையெழுத்து மற்றும் என்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். நான் எதிரி பாபு என்பவர் கடைக்கு பக்கத்தில் மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். சுமார் 3 வருடத்திற்கு முன்பு மாதம், தேதி, ஞாபகம் இல்லை. ரயில்வே போலிசார் பாபு என்பவரின் கடைக்கு வந்து இரும்பு பொருட்களை எடுத்ததாக என்னிடம் கூறி கையெழுத்து வாங்கினார்கள். அந்த பொருட்களை நான் கண்ணால் பார்க்கவில்லை, மற்ற படி இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது கையெழுத்து போடச்சொன்னார்கள் கையெழுத்து போட்டேன். ரயில்வே போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் என்னுடைய வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10) **மற்றொரு ஒப்புதல் வாக்குமூலம் சாட்சியான பாலமுருகன் (அ.சா.5) தனது சாட்சியத்தில்,** என்னிடம் காட்டப்படும் சோதனை பிடியாணையில் உள்ள சாட்சி கையெழுத்தில் இரண்டாவது உள்ள கையெழுத்து மற்றும் என்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். நான் எதிரி பாபு என்பவர் கடைக்கு 3 கடை தள்ளி சைக்கிள் கடை வைத்து நடத்தி வருகிறேன். நான் சரவணன் என்பவரின் மளிகைக்கடையில் பொருட்கள் வாங்க வந்தபோது, ரயில்வே போலிசார் பாபு என்பவரின் கடைக்கு வந்து

இரும்பு பொருட்களை எடுத்ததாக என்னிடம் கூறி கையெழுத்து வாங்கினார்கள். எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னேன். ஒன்றும் பிரச்சனை இல்லை போடுங்கள் என்று சொன்னார்கள் அதனால் கையெழுத்து போட்டேன். அந்த பொருட்களை நான் கண்ணால் பார்க்கவில்லை. மற்ற படி இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது கையெழுத்து போடச்சொன்னார்கள் கையெழுத்து போட்டேன். ரயில்வே போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் என்னுடைய வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

11) **கற்பூரசுந்தரபாண்டியன் (அ.சா.6) தனது சாட்சியத்தில் தனது சாட்சியத்தில்,** 14.02.2020 அன்று RPF காவல் நிலையத்தில் இருந்து காவல் நிலைய குற்ற எண். 3/2019ல் திருட்டு பொருட்களை ஆய்வு செய்யும் படி ஒருவேண்டுகோள் கடிதம் வந்தது 22.02.2020 அன்று நான் RPF SI அலுவலகம் சென்று காவல் நிலைய குற்ற எண். 3/2019ல் திருட்டு போன இரயில்வே சொத்துக்களை ஆய்வு செய்து, அதில் ஒரு வெள்ளை பாலிதின் கவரில் இரயில்வே OHE காப்பர் டிராப்பர் ஒயர் 5mm – 27 Nos அத்துடன் சேர்ந்த பொருளான காப்பர் லாக் பிளேஸ் 100 Nos, காப்பர் டிராப்பர் கிளிப்ஸ்-69 Nos, காப்பர் கான்டேக்ட் ஒயர் 3 FT-1 Nos, காப்பர் கான்டேக்ட் ஒயர் 2 FT-1 Nos, இருந்தது அதை நான் ஆய்வு செய்து, அதில் ஆய்வு செய்ததில் மேற்சொன்ன 69 காப்பர் டிராப்பர் கிளிம்சில் Khatri 1192 என்ற இரயில்வே அடையாள எண் குறிப்பிட்டு இருந்தது. காப்பர் லாக் பிளேஸ் 100 Nosல் Sec 1163 என்ற இரயில்வே அடையாள எண் குறிப்பிட்டு இருந்தது. இவைகளை நான் ஆய்வு செய்து மேற்சொன்ன அனைத்து பொருட்களும் இரயில்வே சொத்துக்கள் என்று அ.சா.ஆ.8 சான்றளித்து, மேற்சொன்ன பொருட்கள் எதுவும் பொதுஇடங்களில் கிடைக்கக்கூடியது அல்ல. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பொருட்கள் தான் நான் மேற்சொன்ன ஆய்வு செய்து சான்று வழங்கிய பொருட்கள். 22.10.2020 அன்றே ஆய்வாளர் என்னை விசாரித்து என்னுடைய வாக்குமூலம் அ.சா.ஆ.9 பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார்.

12) **காவல் உதவி ஆய்வாளர் திரு.சரவணன் (அ.சா.7) தனது சாட்சியத்தில்,** கடந்த 2019ம் வருடம் இரயில்வே பாதுகாப்பு படை சென்னை தலைமையகத்தில் குற்ற

பிரிவில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது இரயில்வே வாரியம் மற்றும் முதன்மை பாதுகாப்பு ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தென்னக இரயில்வேயில் உள்ள அனைத்து கோட்டங்களிலும் பழைய இரயில்வே குற்றவாளிகள் மற்றும் இரயில்வேயில் இருந்து திருடிய இரும்பு பொருட்களை வாங்கும் கடைக்காரர்களை கண்காணிக்குமாறும் அவ்வாறு குற்ற செயல்களில் ஈடுபட்டால் அவர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கும்படியும் கோரியதன் அடிப்படையில் நானும் திருச்சி கோட்டத்தில் குற்ற பிரிவில் பணிபுரிந்த திரு.சந்திரமோகன் அவர்களும், திருச்சி கோட்டத்தில் உள்ள கடலூர் துறைமுக சந்திப்பு இரயில்வே பாதுகாப்பு படை எல்லைக்குட்பட்ட குள்ளஞ்சாவடி கிராமத்தில் உள்ள ஏற்கனவே இரயில்வே வழக்கில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட பாபு என்பவரை பற்றி விசாரித்தபோது அவர் மளிகடை ஒன்று நடத்தி வருவதாகவும் அதே ஊரில் பழைய இரும்பு கடை ஒன்று நடத்தி வருவதாகவும் தகவல் கிடைத்தது. மேலும் பாபு என்பவர் இரயில்வேயில் இருந்து திருடி கொண்டு வரும் இரயில்வே பொருட்களை வாங்கி அதிக விலைக்கு வியாபாரம் செய்வதாக கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நான் கடலூர் துறைமுகத்தில் உள்ள இரயில்வே பாதுகாப்பு படை நிலையத்தை அணுகி அங்கு பணியில் இருந்த உதவி ஆய்வாளர் திரு. பிலோமின்ராஜ் அவர்களிடம் விபரத்தை சொல்ல அன்றைய தினம் 31.12.2019 அன்று சமூகம் நீதிமன்றத்தில் சோதனை கட்டளை பெற்றுக்கொண்டு மேற்படி பாபு நடத்தி வரும் குள்ளச்சாவடியில் உள்ள மளிகை கடை மற்றும் பழைய இரும்பு கடை ஆகியவற்றை சோதனை செய்ய சென்றோம். அதன் படி அன்று மதியம் சுமார் 1.30 மணியிலிருந்து 2.00 மணி வரை பாபு நடத்தி வரும் மளிகை கடையில் அதே பகுதியை சேர்ந்த சாட்சிகள் சரவணன் மற்றும் பாலமுருகன் ஆகியோர்களை தனிநபர் சாட்சிகளாக வைத்து உதவி ஆய்வாளர் திரு.பிலோமின்ராஜ் என்னையும் திரு.சந்திரமோகனையும் சோதனைக்கு சாட்சிகளாக வைத்தும் மளிகை கடையை சோதனை செய்தார். சோதனை செய்யும்போது கடையின் உரிமையாளர் பாபு உடனிருந்தார். சோதனையில் எவ்வித இரயில்வே பொருட்களும் கிடைக்கவில்லை. மேலும் அந்த இடத்திலேயே சோதனை ஜாபிதா ஒன்று தயார் செய்து அந்த சோதனை ஜாபிதாவில் தனி நபர் சாட்சிகளான சரவணன் மற்றும் பாலமுருகன் மற்றும் நான் மற்றும் திரு.சந்திரமோகன் உதவி ஆய்வாளர் மற்றும் கடையின் உரிமையாளர் பாபு

ஆகியோர்கள் கையொப்பம் செய்து, சோதனை ஜாபிதாவின் நகல் ஒன்று கடைக்காரர் பாபுக்கு கொடுக்கப்பட்டு, சோதனை செய்த மளிகை கடையை ஒரு மாதிரி வரைபடம் உதவி ஆய்வாளர் தயார் செய்து, அதில் அனைவரும் கையொப்பம் செய்து, பிறகு கடையின் உரிமையாளர் பாபு, உதவி ஆய்வாளரிடம் தன்னிச்சையாக வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தில் மீனவர் தெரு குள்ளஞ்சாவடியில் தனக்கு பழைய இரும்பு கடை ஒன்று உள்ளதாக கூறினார். பிறகு அன்று மாலை 3.30 மணியிலிருந்து 5.00மணி வரை பாபு நடத்தி வரும் பழைய இரும்பு கடையை சோதனை செய்து, பழைய இரும்பு கடையில் வெட்ட வெளியாக உள்ள இடத்தில் எவ்வித இரயில்வேபொருட்களும் கிடைக்கவில்லை. பிறகு மூடியிருந்த குடோனை திறக்கச்சொல்லி சோதனை செய்து பார்க்கும்போது அந்த குடோனின் தென்மேற்கு பகுதியில் ஒரு வெள்ளை நிற பாலிதிங் பையில் இரயில்வேக்கு சொந்தமான OHE காப்பர் 27 செட் மடக்கிய நிலையிலும் OHE யில் பயன்படுத்தப்படும் காப்பர் பிலேட் 100 எண்ணிக்கையும் OHE யில் பயன்படுத்தப்படும் காப்பர் கிளிப் 69 எண்ணிக்கையும் இருந்தது. மேலும் சோதனை செய்ய அந்த குடோனில் இருந்த இரும்பு கபோடு அடியில் இரண்டு மற்றும் மூன்று அடி நீளமுள்ள OHE யில் பயன்படுத்தப்படும் காப்பர் ராடு இருந்தது. இந்த சோதனையானது மேற்சொன்ன தனி நபர் இரண்டு சாட்சிகள் மற்றும் மேற்சொன்ன RPF சாட்சிகள் இருவர் மற்றும் கடையின் உரிமையாளர் பாபு என்பவரின் முன்னிலையில் நடைபெற்றது. மேற்படி இரயில்வே பொருட்களை சட்டப்பூர்வமாக வைத்திருக்க பாபு என்பவரிடம் எவ்வித அத்தாட்சியோ, பில்லோ இல்லாத காரணத்தினால் மேற்படி இரயில்வே பொருட்களை இரயில்வேயில் இருந்து திருடி இருக்கலாம் அல்லது சட்ட விரோதமாக அடைந்திருக்கலாம் என்ற நியாயமான சந்தேகத்தின் அடிப்படையில் உதவி ஆய்வாளர் திரு.பிலோமின்ராஜ் அந்த இடத்தில் சோதனை ஜாபிதா ஒன்று தயார் செய்து சோதனை ஜாபிதா மூலம் மேற்சொன்ன இரயில்வே பொருட்களை சாட்சிகள் மற்றும் கடையின் உரிமையாளர் முன்னிலையில் கைப்பற்றி, சோதனை ஜாபிதாவில் சாட்சிகள் மற்றும் கடையின் உரிமையாளர் மற்றும் உதவி ஆய்வாளர் ஆகியோர்கள் கையொப்பம் செய்து, சோதனை ஜாபிதாவின் நகல் ஒன்று கடையின் உரிமையாளருக்கு வழங்கப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட இரயில்வே பொருட்களை அடையாளத்திற்காக சாட்சிகள் கடையின் உரிமையாளர் மற்றும்

உதவி ஆய்வாளர் கையொப்பம் இட்ட அடையாள துண்டு சீட்டுகள் ஒட்டப்பட்டது. அந்த இடத்திலேயே ஒரு மாதிரி வரைபடம் வரைந்து அதில் அனைவரும் கையொப்பம் செய்து, பின்னர் உதவி ஆய்வாளர் கடையின் உரிமையாளர் பாபுவை விசாரிக்க அவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒரு தன்னிச்சையான வாக்குமூலத்தை பதிவு செய்து, அந்த வாக்குமூலத்தில் தான் மளிகை மற்றும் பழைய இரும்பு கடை நடத்திவருவதாகவும் மேற்படி இரயில்வே பொருட்களை மூன்று மாதத்திற்கு முன்பு அடையாளம் தெரியாத நபர்கள் தன்னிடம் விற்று பணம் பெற்றதாகவும் இப்படி வாங்கிய பொருட்களை மொத்தமாக வியாபாரம் செய்து விடுவதாகவும் கூறினார். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகள், கடையின் உரிமையாளர் மற்றும் உதவி ஆய்வாளர் கையொப்பம் செய்து, பிறகு கடைக்கார் பாபுவை இரயில்வே பொருட்களை சட்ட விரோதமாக வைத்திருப்பது இரயில்வே பொட்கள் ( சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்டம் 1966 பிரிவு 3ன் படி தண்டனைக்குரிய குற்றம் என கூறி பிரிவு 6ன் படி கைது செய்து, பிறகு கடைக்காரர் பாபுவையும் அவரிடம் இருந்து கைப்பற்றிய இரயில்வே பொருட்களையும் மேல் நடவடிக்கைக்காக அன்றைய தினமே கடலூர் துறைமுக இரயில்வே பாதுகாப்பு நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டது. இந்த வழக்கு சம்பந்தமாக 2020ம் வருடம் பிப்ரவரி மாதம் உதவி ஆய்வாளர் திரு.பிலமின்ராஜ் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

13) **தலைமைக் காவலர் திரு.சந்திரமோகன் (அ.சா.8) தனது சாட்சியத்தில்,** கடந்த 2019ம் வருடம் இரயில்வே பாதுகாப்பு படை திருச்சி கோட்டத்தில் குற்றபிரிவில் காவலராக பணியில் இருந்தபோது இரயில்வே வாரியம் மற்றும் முதன்மை பாதுகாப்பு ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின் படி தென்னக இரயில்வேயில் உள்ள அனைத்து கோட்டங்களிலும் பழைய இரயில்வே குற்றவாளிகள் மற்றும் இரயில்வேயில் இருந்து திருடிய இரும்பு பொருட்களை வாங்கும் கடைக்காரர்களை கண்காணிக்குமாறும் அவ்வாறு குற்ற செயல்களில் ஈடுபட்டால் அவர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிகக்கை எடுக்கும்படியும் கோரியதன் அடிப்படையில் நானும் திருச்சி கோட்டத்தில் குற்ற பிரிவில் பணி புரிந்த திரு.சரவணன் அவர்களும், திருச்சி கோட்டத்தில் உள்ள கடலூர் துறை முக சந்திப்பு இரயில்வே பாதுகாப்பு படை எல்லைக்குட்பட்ட குள்ளஞ்சாவடி கிராமத்தில் உள்ள ஏற்கனவே இரயில்வே

வழக்கில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட பாபு என்பவரை பற்றி விசாரித்தபோது அவர் மளிகை கடை ஒன்று நடத்தி வருவதாகவும் அதே ஊரில் பழைய இரும்பு கடை ஒன்று நடத்தி வருவதாகவும் தகவல் கிடைத்தது. மேலும் பாபு என்பவர் இரயில்வேயில் இருந்து திருடி கொண்டு வரும் இரயில்வே பொருட்களை வாங்கி அதிக விலைக்கு வியாபாரம் செய்வதாக கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நான் கடலூர் துறைமுகத்தில் உள்ள இரயில்வே பாதுகாப்பு படை நிலையத்தை அணுகி அங்கு பணியில் இருந்த உதவி ஆய்வாளர் திரு. பிலமின்ராஜ் அவர்களிடம் விபரத்தை சொல்ல அன்றைய தினம் 31.12.2019 அன்று சமூகம் நீதிமன்றத்தில் சோதனை கட்டளை பெற்றுக்கொண்டு மேற்படி பாபு நடத்தி வரும் குள்ளச்சாவடியில் உள்ள மளிகை கடை மற்றும் பழைய இரும்பு கடை ஆகியவற்றை சோதனை செய்ய சென்றோம். அதன் படி அன்று மதியம் சுமார் 1.30 மணியிலிருந்து 2.00 மணி வரை பாபு நடத்தி வரும் மளிகை கடையில் அதே பகுதியை சேர்ந்த சாட்சிகள் சரவணன் மற்றும் பாலமுருகன் ஆகியோர்களை தனி நபர் சாட்சிகளாக வைத்து உதவி ஆய்வாளர் திரு.பிலமின்ராஜ் என்னையும் திரு.சரவணனையும் சோதனைக்கு சாட்சிகளாக வைத்தும் மளிகை கடையை சோதனை செய்து, சோதனை செய்யும்போது கடையின் உரிமையாளர் பாபு உடனிருந்தார். சோதனையில் எவ்வித இரயில்வே பொருட்களும் கிடைக்கவில்லை. மேலும் அந்த இடத்திலேயே சோதனை ஜாபிதா ஒன்று தயார் செய்து அந்த சோதனை ஜாபிதாவில் தனி நபர் சாட்சிகளான சரவணன் மற்றும் பாலமுருகன் மற்றும் நான் மற்றும் திரு.சரவணன் உதவி ஆய்வாளர் மற்றும் கடையின் உரிமையாளர் பாபு ஆகியோர்கள் கையொப்பம் செய்து, சோதனை ஜாபிதாவின் நகல் ஒன்று கடைக்காரர் பாபுக்கு கொடுக்கப்பட்டு, சோதனை செய்த மளிகை கடையை ஒரு மாதிரி வரைபடம் உதவி ஆய்வாளர் தயார் செய்து, அதில் அனைவரும் கையொப்பம் செய்து, பிறகு கடையின் உரிமையாளர் பாபு, உதவி ஆய்வாளரிடம் தன்னிச்சையாக வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தில் மீனவர் தெரு குள்ளஞ்சாவடியில் தனக்கு பழைய இரும்பு கடை ஒன்று உள்ளதாக கூறினார். பிறகு அன்று மாலை 3.30 மணியிலிருந்து 5.00மணி வரை பாபு நடத்தி வரும் பழைய இரும்பு கடையை சோதனை செய்து, பழைய இரும்பு கடையில் வெட்ட வெளியாக உள்ள இடத்தில் எவ்வித இரயில்வேபொருட்களும் கிடைக்கவில்லை. பிறகு மூடியிருந்த குடோனை

திறக்கச்சொல்லி சோதனை செய்து பார்க்கும்போது அந்த குடோனின் தென்மேற்கு பகுதியில் ஒரு வெள்ளை நிற பாலிதிங் பையில் இரயில்வேவுக்கு சொந்தமான OHE காப்பர் 27 செட் மடக்கிய நிலையிலும் OHE யில் பயன்படுத்தப்படும் காப்பர் பிலேட் 100 எண்ணிக்கையும் OHE யில் பயன்படுத்தப்படும் காப்பர் கிளிப் 69 எண்ணிக்கையும் இருந்தது. மேலும்சோதனை செய்ய அந்த குடோனில் இருந்த இரும்பு கபோடு அடியில் இரண்டு மற்றும் மூன்று அடி நீளமுள்ள OHE யில் பயன்படுத்தப்படும் காப்பர் ராடு இருந்தது. இந்த சோதனையானது மேற்சொன்ன தனி நபர் இரண்டு சாட்சிகள் மற்றும் மேற்சொன்ன RPF சாட்சிகள் இருவர் மற்றும் கடையின் உரிமையாளர் பாபு என்பவரின் முன்னிலையில் நடைபெற்றது. மேற்படி இரயில்வே பொருட்களை சட்டப்பூர்வமாக வைத்திருக்க பாபு என்பவரிடம் எவ்வித அத்தாட்சியோ, பில்லோ இல்லாத காரணத்தினால் மேற்படி இரயில்வே பொருட்களை இரயில்வேயில் இருந்து திருடி இருக்கலாம் அல்லது சட்ட விரோதமாக அடைந்திருக்கலாம் என்ற நியாயமான சந்தேகத்தின் அடிப்படையில் உதவி ஆய்வாளர் திரு.பிலமின்ராஜ் அந்த இடத்தில் சோதனை ஜாபிதா ஒன்று தயார் செய்து சோதனை ஜாபிதா மூலம் மேற்சொன்ன இரயில்வே பொருட்களை சாட்சிகள் மற்றும் கடையின் உரிமையாளர் முன்னிலையில் கைப்பற்றினார். சோதனை ஜாபிதாவில் சாட்சிகள் மற்றும் கடையின் உரிமையாளர் மற்றும் உதவி ஆய்வாளர் ஆகியோர்கள் கையொப்பம் செய்து, சோதனை ஜாபிதாவின் நகல் ஒன்று கடையின் உரிமையாளருக்கு வழங்கப்பட்டு, மேற்படி கைப்பற்றப்பட்ட இரயில்வே பொருட்களை அடையாளத்திற்காக சாட்சிகள், கடையின் உரிமையாளர் மற்றும் உதவி ஆய்வாளர் கையொப்பம் இட்ட அடையாள துண்டு சீட்டுகள் ஒட்டப்பட்டு, அந்த இடத்திலேயே ஒரு மாதிரி வரைபடம் வரைந்து அதில் அனைவரும் கையொப்பம் செய்து, பின்னர் உதவி ஆய்வாளர் கடையின் உரிமையாளர் பாபுவை விசாரிக்க அவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒரு தன்னிச்சையான வாக்குமூலத்தை பதிவு செய்து, அந்த வாக்குமூலத்தில் தான் மளிகை மற்றும் பழைய இரும்பு கடை நடத்திவருவதாகவும் மேற்படி இரயில்வே பொருட்களை மூன்று மாதத்திற்கு முன்பு அடையாளம் தெரியாத நபர்கள் தன்னிடம் விற்று பணம் பெற்றதாகவும் இப்படி வாங்கிய பொருட்களை மொத்தமாக வியாபாரம் செய்து விடுவதாகவும் கூறினார். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகள், கடையின் உரிமையாளர்

மற்றும் உதவி ஆய்வாளர் கையொப்பம் செய்து, பிறகு கடைக்கார் பாபுவை இரயில்வே பொருட்களை சட்ட விரோதமாக வைத்திருப்பது இரயில்வே பொட்கள் ( சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்டம் 1966 பிரிவு 3ன் படி தண்டனைக்குரிய குற்றம் என கூறி பிரிவு 6ன் படி கைது செய்து, பிறகு கடைக்காரர் பாபுவையும் அவரிடம் இருந்து கைப்பற்றிய இரயில்வே பொருட்களையும் மேல் நடவடிக்கைக்காக அன்றைய தினமே கடலூர் துறைமுக இரயில்வே பாதுகாப்பு நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டது. இந்த வழக்கு சம்பந்தமாக 2020ம் வருடம் பிப்ரவரி மாதம் உதவி ஆய்வாளர் திரு.பிலோமின்ராஜ் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

14) இத்துடன் அரசுத் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

15) அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**16) விவாதம்**:-

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இதனை மறுத்து, அரசுத்தரப்பில் எதிரி மீதான குற்றங்கள் சந்தேகத்திற்கிடமின்றி மெய்பிக்கப்படவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**17) தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**:-

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

## தீர்வு

**18)** இருதரப்பும் கேட்கப்பட்டது அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

**19)** கடந்த 31.012.2019 அன்று கடலூர் துறைமுகத்தில் உள்ள இரயில்வே பாதுகாப்பு படையில் பணியில் அ.சா.1 இருந்தபோது திருச்சிகோட்ட இரயில்வே பாதுகாப்பு படை குற்றப்புலனாய்வு பிரிவு மற்றும் குற்றத்தடுப்பு பிரிவு அவர்களால் இரயில்வே பொருட்களை ஆஜர் எதிரி விற்பதாக கொடுத்த தகவலின்பேரில் அ.சா.1, எதிரியின் மளிகை கடையில் சோதனை செய்வதற்கு நீதிமன்றத்தில் சோதனை உத்தரவை பெற்று அன்றைய தினம் குற்றத்தடுப்பு திரு.சஞ்சய் பனிக்கர் மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவு ஆய்வாளர் திருசந்திரசேகரர் மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவு உதவி ஆய்வாளர் திரு.சரவணன் மற்றும் காவலர் திரு.சந்திரமோகன் அவர்களோடு அந்த கடையை சோதனை செய்தபோது கடையில் எந்தவிதமான இரயில்வே பொருட்களும் அகப்படவில்லை என்று சோதனை ஜாபிதா (அ.சா.ஆ.1) தயார் செய்து, பின்னர் எதிரியை விசாரித்து வாக்குமூலம் பெற்றபோது, "நான் எனது வீட்டில் நடத்திவரும் இரும்பு கடையை பற்றி கூறினேன். அந்த கடையை என் மனைவி இந்திராவும் இரண்டு வேலை ஆட்களும் பார்த்து கொள்கிறார்கள். எனது பழைய இரும்பு கடையை பார்க்க வேண்டும் என்று சொன்னால் நான் அழைத்து செல்கிறேன்" என்று கூறிய ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி (அ.சா.ஆ.2) தயார் செய்து, எதிரி இரும்பு கடைக்கு அ.சா.1ஐ, சாட்சிகளையும் அழைத்து சென்றார். பூட்டி இருந்த பழைய இரும்பு கடை குடோனை திறக்க சொல்லி 13.30 முதல் 17.00 மணி வரை சோதனையிட்டபோது, அந்த குடோனில் தென்மேற்கு மூலையில் வெள்ளைநிற பாலித்தின் பேக் பண்டல் இருந்ததை சோதனை செய்து பார்த்தபோது இரயில்வே பொருட்கள் இருந்ததால், அங்கிருந்த தனிநபர் சாட்சிகள் சரவணன், பாலமுருகன் மற்றும் இரயில்வே துறை சாட்சிகள் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாகவும், ரயில்வே பொருட்களை வைத்திருக்க கடையில் உரிமையாளரிடம் எந்தவித அத்தாட்சியும் இல்லாததால், கடையின் உரிமையாளரான எதிரியை விசாரித்ததில் அவர் கைப்பற்றப்பட்ட பொருட்களை அடையாளம் தெரியாத சைக்கிள் வியாபாரியிடம் வாங்கியதாக சொன்னதாகவும், மேற்கண்ட தனிநபர் சாட்சிகளின் முன்னிலையில் மறு வாக்குமூலம் பதிவு

செய்யப்பட்டு, பின்னர் எதிரியை நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சாட்சிகளை விசாரித்து எதிரிக்கு எதிராக 3(a) RP(UP) Act 1966-ன் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது புகார்தாரர் தரப்பு வழக்காகும்.

**20)** மேற்கண்ட புகார்தாரர் வழக்கு புகார்தாரர் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்பொழுது,

**21)** சோதனை கட்டளையின் அடிப்படையில் எதிரியின் மளிகை கடையை சோதனை செய்ய சென்ற அ.சா.1, தன்னுடன் குற்றத்தடுப்பு திரு.சஞ்சய் பனிக்கர் மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவு ஆய்வாளர் திரு.சந்திரசேகர் மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவு உதவி ஆய்வாளர் திரு.சரவணன் மற்றும் காவலர் திரு.சந்திரமோகன் உடன் வந்ததாகவும், அங்கே தனிநபர்கள் முன்னிலையில் எதிரியின் மளிகை கடையினை சோதனை செய்தபோது எந்தவிதமான இரயில்வே பொருட்கள் அகப்படாததால் சோதனை ஜாபிதா (அ.சா.ஆ.1) தயார் செய்து, எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றபோது, எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் **"எனது வீட்டில் இரும்பு கடையை பற்றி கூறினேன். அந்த கடையை என் மனைவி இந்திராவும், இரண்டு வேலை ஆட்களும் பார்த்து கொள்கிறார்கள் எனது பழைய இரும்பு கடையை பார்க்க வேண்டுஎன்று சொன்னால் நான் அழைத்து செல்கிறேன்"** என்று சொன்னதால், மேற்படி சாட்சிகளை அழைத்து சென்று பூட்டி இருந்த பழைய இரும்பு கடை குடோனில் சோதனை செய்தபோது, தென்மேற்கு மூலையில் வெள்ளைநிற பாலித்தின் பேக் பண்டல் இருந்தது அதில் இரயில்வே பொருட்கள் இருந்ததால், அ.சா.1 சோதனை ஜாபிதா (அ.சா.ஆ.2) ஐ தயார் செய்துள்ளார்.

மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் **"சோதனை பிடியாணைக்காக நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். குள்ளஞ்சாவடி ஆலப்பாக்கம் மெயின்ரோட்டில் உள்ள பாபு என்பவருக்கு சொந்தமான மளிகை கடையை சோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் வைத்தேன். மளிகை கடையை மட்டும் சோதனை செய்தவற்கு உத்தரவு பெற்றப்பட்டது என்றால் சரிதான். சோதனை பிடியாணையில் பாபுவிற்கு சொந்தமான மளிகை கடையில் சோதனை செய்யப்பட்டு அங்கு இரயில்வேக்கு சொந்தமான பொருட்கள் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டாவதாக சோதனை செய்த**

**குடோனிற்கு அருகே வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அருகே வீட்டில் உள்ள யாரையும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இரண்டாவதாக சோதனை செய்தயிடத்தை போட்டா எடுத்தீர்களா என்றால் எடுத்தோம். ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்று பொருட்களில் தெற்கு இரயில்வே என முத்திரை உள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கின் சான்று பொருட்கள் எந்த வருடத்தில் தயாரிக்கப்பட்டது என்று தங்கள் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**22)** மேலும், கிராம நிர்வாக அதிகாரியான சந்தானகிருஷ்ணன் (அ.சா.2), 01.06.2020 அன்று கோவிந்தன் மகன் பாபு என்பவர் மேற்கண்ட கடையினை நடத்திவருவதாக அ.சா.ஆ.6 சான்று வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

**23)** முத்திரை ஆய்வாளரான ஜெராட் (அ.சா.3), அலுவலகத்தில் இருந்த ஆணங்களை பரிசீலனை செய்து ஏற்கனவே வழங்கப்பட்ட எடை அளவு கருவியின் பரிசோதனை செய்த சான்று (அ.சா.ஆ.7) நகலை அனுப்பி வைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**24)** ஒப்புதல் வாக்குமூலம் சாட்சியான சரவணன் (அ.சா.4), என்னிடம் காட்டப்படும் சோதனை பிடியாணையில் உள்ள சாட்சி கையெழுத்தில் முதலாவதாக உள்ள கையெழுத்து மற்றும் என்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். எதிரி பாபு என்பவர் கடைக்கு பக்கத்தில் மளிகை கடை வைத்து நடத்து வருகிறேன். சுமார் 3 வருடத்திற்கு முன்பு மாதம், தேதி, ஞாபகம் இல்லை. இரயில்வே போலிசார் பாபு என்பவரின் கடைக்கு வந்து இரும்பு பொருட்களை எடுத்தாக என்னிடம் கூறி கையெழுத்து வாங்கினார்கள். அந்த பொருட்களை நான் கண்ணால் பார்க்கவில்லை. மற்ற படி இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது கையெழுத்து போடச்சொன்னார்கள் கையெழுத்து போட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்று அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக மாறியுள்ளார். அரசுத்தரப்பு குறுக்கு விசாரணையின்போது அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

**25)** மற்றொரு ஒப்புதல் வாக்குமூலம் சாட்சியான பாலமுருகன் (அ.சா.5), என்னிடம் காட்டப்படும் சோதனை பிடியாணையில் உள்ள சாட்சி கையெழுத்தில் இரண்டாவது உள்ள கையெழுத்து மற்றும் என்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். நான் எதிரி பாபு என்பவர் கடைக்கு 3 கடை தள்ளி சைக்கிள் கடை வைத்து நடத்தி வருகிறேன். நான் சரவணன் என்பவரின் மளிகைக்கடையில் பொருட்கள் வாங்க வந்தபோது, ரயில்வே போலிசார் பாபு என்பவரின் கடைக்கு வந்து இரும்பு பொருட்களை எடுத்ததாக என்னிடம் கூறி கையெழுத்து வாங்கினார்கள். எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னேன். ஒன்றும் பிரச்சனை இல்லை போடுங்கள் என்று சொன்னார்கள் அதனால் கையெழுத்து போட்டேன். அந்த பொருட்களை நான் கண்ணால் பார்க்கவில்லை, மற்றபடி இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது கையெழுத்து போடச்சொன்னார்கள் கையெழுத்து போட்டேன். ரயில்வே போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் என்னுடைய வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்று அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக மாறியுள்ளார். அரசுத்தரப்பு குறுக்கு விசாரணையின்போது அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

**26)** Senior Section Engineer திரு.கற்பூரசுந்தரபாண்டியன் (அ.சா.6) தனது சாட்சியத்தில், கைப்பற்றப்பட்ட சொத்துக்களை ஆய்வு செய்து, இரயில்வேக்கு சொந்தமானது என்று அ.சா.ஆ.8 சான்று வழங்கி, கைப்பற்றப்பட்ட பொருட்கள் எதுவும் பொது இடங்களில் கிடைக்ககூடியது அல்ல என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.6 தனது குறுக்கு விசாரணையில் **"ஆய்வு செய்த பொருட்கள் புதிய பொருட்களா அல்லது பழைய பொருட்களா என்பது குறித்து நான் சான்று அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் ஆய்வு செய்த பொருட்களை புகைப்படம் எடுத்தேனா என்றால் இல்லை** " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**27)** அன்றைய தினம் எதிரியின் கடையை சோதனை செய்வதற்காக அ.சா.1 உடன் சென்ற காவல் உதவி ஆய்வாளர் திரு.சரவணன் (அ.சா.7), மற்றும் தலைமை காவலர் திரு.சந்திரமோகன் (அ.சா.8) அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் அ.சா.7 மற்றும் அ.சா.8 தனது குறுக்கு விசாரணையில், "**மளிகை கடையில் இரயில்வேக்கு சம்பந்தமாக எந்த பொருட்களும் அகப்படவில்லை என்று நானும், உதவி ஆய்வாளரும் சாட்சிகளும் சோதனை ஜாபிதாவில் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். அந்த குடோனில் கைப்பற்றப்படதாக சொல்லப்படும் பொருட்களை புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்கள் புதியதா அல்லது பழையதா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அவ்வாறு குறிப்பிடவில்லை**" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**28)** மேற்கண்ட சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது,

**29)** அ.சா.1 எதிரியின் மளிகை கடைக்கு மட்டும் சோதனை கட்டளை பெற்று எதிரியின் மளிகை கடையினை சோதனை செய்யும்போது, அங்கு இரயில்வே பொருட்கள் எதுவும் கிடைக்காததால், எதிரியிடம் வாக்குமூலம் பெற்றுள்ளார். அந்த வாக்குமூலத்தில் எதிரி **"எனது வீட்டில் நடத்திவரும் இரும்பு கடையை பற்றி கூறினேன். அந்த கடையை என் மனைவி இந்திராவும் இரண்டு வேலை ஆட்களும் பார்த்து கொள்கிறார்கள். எனது பழைய இரும்பு கடையை பாரக்க வேண்டும் என்று சொன்னால் நான் அழைத்து செல்கிறேன்**" என்று எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் எதிரியின் குடோனை சோதனை செய்துள்ளார்கள் என்று இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**30)** மேலும், எதிரியின் குடோனில் இருந்து தான் இவ்வழக்கு சொத்துக்களான சா.பொ.1 முதல் சா.பொ.4ஐ அ.சா.1 கைப்பற்றினார் என்று அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது,

**31)** அ.சா.6 முதல் அ.சா.8 வரையான சாட்சிகள் அ.சா.1 எதிரியின் மளிகை கடைக்கு சோதனைக்கு செல்லும்போது அ.சா.1க்கு உதவியாக சென்று, அ.சா.1 கொடுத்த புகாரினை ஊர்ஜிதம் செய்து சாட்சியம் அளித்துள்ளார்கள். ஆனால் அ.சா.1, அ.சா.6 முதல் அ.சா.8 வரையான சாட்சிகள் அளித்த சாட்சிகளின்படி பார்க்கும்போது, சோதனை உத்தரவு கொடுத்த கடையில் இருந்து இரயில்வே பொருட்கள்

எடுக்காமல் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் எதிரியின் மற்றொரு குடோனில் இருந்து இரயில்வே பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக கூறி சாட்சியம் அளித்துள்ளது இந்நீதிமன்றத்தால் ஏற்று கொள்ளும் வகையில் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**32)** இரயில்வே போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலம் Extra Judicial confession வகையானது பலதரப்பட்ட தீர்பாணைகளில் உச்சநீதிமன்றம் இவ்வாறு Extra Judicial confession என்பதை ஏற்று கொள்ள வேண்டுமென்றால் அது நீதிமன்ற நம்பிக்கைதன்மையை ஊர்ஜிதம் செய்யப்பட மற்ற சாட்சிகள் விசாரித்திருக்க வேண்டுமென்று எடுத்துரைத்துள்ளது.

மேலும், Sahadevan and Another v. State of Tamil Nadu, (2012) 6 SCC 403, மற்றும் Balwinder Singh v. State of Punjab [1995 Supp (4) SCC 259: 1996 SCC (Cri) 59] ஆகிய தீர்பாணைகளில் Extra Judicial confession என்பது சாட்சியத்தின் தம்மையும், வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள கூடிய தன்மை என்பதை பற்றி என்ன கூறப்பட்டுள்ளது என்றால், An extra-judicial confession by its very nature is rather a weak type of evidence and requires appreciation with a great deal of care and caution. Where an extra-judicial confession is surrounded by suspicious circumstances, its credibility becomes doubtful and it loses its importance." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரியால் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் வாக்குமூலம் வேறு எந்த ஒரு சாட்சியத்தாலும் ஊர்ஜிதம் செய்யப்பட்டதா என்று பார்க்கும்போது,

**33)** அ.சா.1, அ.சா.6 முதல் அ.சா.8 வரையான சாட்சிகள் தனிநபர் சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5ன் முன்னிலையில் சா.பொ.1 முதல் சா.பொ.4 ஆகியவற்றை கைப்பற்றப்பட்டதாக கூறியுள்ளார்கள். ஆனால் அ.சா.4 தனது சாட்சியத்தில், ரயில்வே போலிசார் பாபு என்பவரின் கடைக்கு வந்து இரும்பு பொருட்களை எடுத்ததாக என்னிடம் கூறி கையெழுத்து வாங்கினார்கள். அந்த பொருட்களை நான் கண்ணால் பார்க்கவில்லை. மற்ற படி இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது கையெழுத்து போடச்சொன்னார்கள் கையெழுத்து போட்டேன் என்றும், மற்றொரு

சாட்சியான அ.சா.5 எதிரி பாபு என்பவர் கடைக்கு 3 கடை தள்ளி சைக்கிளில் கடை வைத்து நடத்தி வருகிறேன். சரவணன் என்பவரின் மளிகை கடையில் பொருட்கள் வாங்க வந்தபோது, ரயில்வே போலிசார் பாபு என்பவரின் கடைக்கு வந்து இரும்பு பொருட்களை எடுத்ததாக என்னிடம் கூறி கையெழுத்து வாங்கினார்கள். எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னேன். ஒன்றும் பிரச்சனை இல்லை போடுங்கள் என்று சொன்னார்கள் அதனால் கையெழுத்து போட்டேன். அந்த பொருட்களை நான் கண்ணால் பார்க்கவில்லை. மற்ற படி இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது கையெழுத்து போடச்சொன்னார்கள் கையெழுத்து போட்டேன் என்று அ.சா.4 மற்றும் அ.சா.5 அரசுத்தரப்பில் பிறழ்சாட்சிகளாக மாறியுள்ளார்கள். அரசுத்தரப்பு குறுக்கு விசாரணையின்போதும் அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

**34)** மேலும், அ.சா.6 இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களை ஆய்வு செய்து இரயில்வே பொருட்கள் தான் என்று அ.சா.ஆ.8 சான்று வழங்கியுள்ளார். அ.சா.6 தனது குறுக்கு விசாரணையில் **"ஆய்வு செய்த பொருட்கள் புதிய பொருட்களா அல்லது பழைய பொருட்களா என்பது குறித்து சொல்லவில்லை. ஆய்வு செய்த பொருட்களை புகைப்படம் எடுக்கவில்லை**" என்று கூறியுள்ளார். இதனை வைத்து பார்க்கும்போது கைப்பற்றப்பட்ட பொருட்கள் எதிரியிடமிருந்துதான் கைப்பற்றப்பட்டதா என்பது குறித்து சந்தேகம் எழுகிறது. மேலும், அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், இவ்வழக்கின் சான்று பொருட்களில் தெற்கு இரயில்வே குறியீடு இல்லை என்று கூறியுள்ளது, மேலும் இவ்வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

**35)** மேலும், அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் **"சோதனை செய்த குடோனிற்கு அருகே வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அருகே வீட்டில் உள்ள யாரையும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்"** என்று கூறியுள்ளதிலிருந்து, எதிரியின் குடோனில் சோதனை செய்யும்போது அருகே பொதுமக்கள் நிறைந்தயிடம் என்று தெரியவருகிறது. ஆனால் இவ்வழக்கில் அ.சா.4 மற்றும் அ.சா.5 ஐ தவிர மற்ற தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரித்து சாட்சிகளாக சேர்க்கவில்லை. அதற்கான காரணத்தையும் அ.சா.1 தனது சாட்சியத்தில்

குறிப்பிடவில்லை. மேலும், அ.சா.4 மற்றும் அ.சா.5, கைப்பற்றப்பட்ட பொருட்களை கண்ணால் பார்க்கவில்லை. மற்ற படி இந்த வழக்கு சம்பதமாக எங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், கையெழுத்து போடச்சொன்னார்கள் போட்டோம் என்று கூறியுள்ளதிலிருந்து, தனிநபர் சாட்சிகள் இல்லாமல் எதிரியிடமிருந்து வாக்குமூலம் பெற்றப்பட்டது, எதிரியை இவ்வழக்கு குற்ற சம்பவத்தோடு தொடர்புபடுத்துவதாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**36)** எனவே, மேற்கண்ட சாட்சிகள் மூலம் இவ்வழக்கின் எதிரியின் குடோனில் இருந்து தான் இரயில்வே பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்று நிரூபிக்கப்படாததால், அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**37)** முடிவாக, இவ்வழக்கில் எதிரி சட்டப்பிரிவு 3(அ) இருப்புபாதை சொத்துக்கள் (சட்டவிரோத உடைமை) இரயில்வே சட்டம் 1966ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன்கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**38)** எதிரிகள் இவ்வழக்கில் எழுதிக்கொடுத்துள்ள பிணைபத்திரங்கள் வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

**39)** இவ்வழக்கு சொத்தான சி.பி.எண்.26/2020 ல் கண்ட சா.பொ.1 முதல் சா.பொ.4ஐ மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு சம்பந்தப்பட்ட கடலூர் இரயில்வே பாதுகாப்புபடை அலுவலர் இந்நீதிமன்றத்தில் மனுசெய்து பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 26.03.2026-ந் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SRINITHI R

Digitally signed by SRINITHI R
Date: 2026.03.26 18:29:19 +0530

சிறப்பு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, (இரயில்வே)

கடலூர்.

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

அசா.1 திரு. பிலோமின்ராஜ் (Sub Inspector - RPF)

அசா.2 திரு. சந்தானகிருஷ்ணன் (கிராம நிர்வாக அலுவலர்)

அசா.3 திரு. ஜெராட் (முத்திரை ஆய்வாளர்)

அசா.4 திரு. சரவணன்

அசா.5திரு. பாலமுருகன்

அசா.6 திரு. கற்பூரசுந்தரபாண்டியன் (Senior Section Engineer)

அசா.7 திரு. சரவணன் (காவல் உதவி ஆய்வாளர்)

அசா.8 திரு. சந்திரமோகன் (தலைமை காவலர்)

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அசாஆ.1 | 31.12.2019 | எதிரியின் மளிகை கடையில் எந்தவிதமான இரயில்வே பொருட்கள் அகப்படவில்லை என்பதற்கான சோதனை ஜாபிதா |
| அசாஆ.2 | 31.12.2019 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி "எனது வீட்டில் நடத்திவரும் இரும்பு கடையை பற்றி கூறினேன். அந்த கடையை என் மனைவி இந்திராவும் இரண்டு வேலை ஆட்களும் பார்த்து கொள்கிறார்கள். எனது பழைய இரும்பு கடையை பாரக்க வேண்டும் என்று சொன்னால் நான் அழைத்து செல்கிறேன்" |
| அசாஆ.3 | 31.12.2019 | குடோனில் இரயில்வே பொருட்களை கைப்பற்றியதற்கான சோதனை ஜாபிதா |
| அசாஆ.4 | 31.12.2019 | மறு ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி "கைப்பற்றப்பட்ட பொருட்களை அடையாளம் தெரியாத சைக்கிள் வியாபாரியிடம் வாங்கியதாக சொன்னார். இரயில்வே பொருட்கள் என்று தெரியாமல் இலாபம் அடையும் நோக்கி வாங்கியதாக சொன்னார்" |
| அசாஆ.5 | 31.12.2019 | படிவம் 91 |

அசாஆ.6 31.12.2019 எதிரி இரும்பு கடை நடத்துவதற்கான கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று

அசாஆ.7 31.12.2019 எடை அளவு கருவி பரிசோதனை

**அரசு தரப்பு சான்றுபொருள்**

சா.பொ.1 - 27 sets copper dropper,

சா.பொ.2 - 100 எண்ணிகையிலான copper lock plates,

சா.பொ.3 - 69 எண்ணிகையிலான copper clips.

சா.பொ.4 - 3 அடி நீளமுள்ள copper conduct wire மற்றும் 2 அடி நீளமுள்ள copper conduct wire

**எதிரி தரப்பு சான்றாவணம், சான்றுபொருள் - இல்லை**

SRINITHI R

Digitally signed by SRINITHI R
Date: 2026.03.26 18:29:12 +0530

சிறப்பு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, (இரயில்வே)

கடலூர்.

**குறிப்பு**

1. விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

2. எந்தவொரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை

**நகல்**

1. மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர், கடலூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.